## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கட்புல ஊனமுற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்

---

*[1992, மார்ச் மாதம் 05 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1992, மார்ச் மாதம் 06 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 — தபாற் செலவு : ரூபா 1.00

## 1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கட்புல ஊனமுற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்

*[1992, மார்ச் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச. வ.—ஓ. 82/88
2000

**கட்புல ஊனமுற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் என அழைக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தைத் தாபிப்பதற்கும், அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது 1992 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கட்புல ஊனமுற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**கட்புல ஊனமுற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைத் தாபித்தல்.**

2. (1) இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் கட்புல ஊனமுற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் என அழைக்கப்படவேண்டிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறு வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயர் கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**நிதியத்தின் முகாமைச் சபை.**

3. (1) நிதியத்தின் நிர்வாகம் முகாமை மற்றும் கட்டுப்பாடு இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அமைக்கப்படும் முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

(2) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதியத்தின் முகாமைச்சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) சமூகசேவைகள் சமூகநலன் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்—அவர் சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார் ;

(ii) வண. கலபொட ஞானிசார தேரோ—அவர் தாம் வாழும் காலத்தின்போது சபையின் உறுப்பினராக இருத்தல் வேண்டும் ;

(iii) அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டியவரான அப்போதைக்குச் சமூகசேவைகள் பணிப்பாளர் என்னும் பதவியை வகிக்கும் ஆள் ;

(iv) கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட சிறிலங்கா குருடர் நலன்புரிச் சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர்;

(v) சிறிலங்கா குருடர் நலன்புரி சபையின் ஒரு பிரதிநிதி;

(vi) கட்புல ஊனமுற்றோர்க்கான இலங்கை தேசிய சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர்;

(vii) முதலமைச்சரின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(viii) அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய இலங்கை அரிமாக் கழகத்தின் ஒரு பிரதிநிதி.

(3) அமைச்சரால் நியமிக்கப்படும் முகாமைச் சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அமைச்சரினால் முன்னராக அகற்றப்பட்டாலன்றி ஈராண்டு காலத்திற்கு அப்பதவியை வகித்தல் வேண்டும்.

(4) தவிசாளர், சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் வருகை தாராதிருப்பின், வருகை தந்துள்ள உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(5) சபை கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) சபையானது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, சபையின் கூட்டங்கள் தொடர்பான நடைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலையும் ஒழுங்குபடுத்தலாம்.

(7) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் சபை உறுப்பினரிடையே வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக அல்லது உறுப்பினரொருவரை நியமிப்பதில் ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டும் வலுவற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

**நிதியத்தின் இலச்சினை.**

4. நிதியத்தின் இலச்சினையானது சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். இலச்சினையானது சபையின் அனுமதியுடனன்றியும் சபையின் இரு உறுப்பினர்களினது முன்னிலையில் அன்றியும் ஏதேனும் சாதனத்திற்கு அல்லது ஆவணத்திற்குப் பொறிக்கப்படல் ஆகாது; உறுப்பினர்கள் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடல் வேண்டும்.

**நிதியத்தின் குறிக் கோள்கள்.**

5. பின்வருவன நிதியத்தின் குறிக்கோள்களாதல் வேண்டும் :—

(அ) கட்புல ஊனமுற்றோருக்கு கல்விசார் மற்றும் தொழில்சார் பயிற்சி வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு ;

(ஆ) கட்புல ஊனமுற்றோருக்குத் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், அவசியமேற்படுமிடத்து, சுயதொழிலைச் செய்வதற்காகப் பண உதவியையும் வழிகாட்டலையும் அவர்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ;

(இ) கட்புல ஊனமுற்றோர் கற்கை நெறிகளைத் தொடர அல்லது தொழில்சார் பயிற்சியைப் பெறுவதற்கு இயலச்செய்ய இருப்பிட வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு ;

(ஈ) கட்புல ஊனமுற்றோரின் நலனுக்கான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு;

(உ) கட்புல ஊனமுற்றோரால் உற்பத்திசெய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு; அத்துடன்

(ஊ) கட்புல ஊனமுற்ற ஆட்கள் சம உரிமைகளையும், சமவாய்ப்புக்களையும் பெறுவதைத் தடுக்கும் நிலைமைகளை அகற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு.

நிதியத்திற்கு செலுத்தப் படும் கொடுப் பனவுகள்.

6. (1) சபையானது, நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உகந்தனவான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாச் செயல்களையும் செய்வதற்கு நிதியத்தின்பேரில் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றிப் பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, மரண சாதனமூலம் கொடுத்தலின் பயனாக அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களைக் கொள்வதற்கும், வைத்திருப்பதற்கும் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை விற்பனை செய்தல், ஈடுவைத்தல், குத்தகைக்கு விடுதல், அளித்தல், உரித்துமாற்றுதல், மரண சாதனமூலம் கொடுத்தல், சாட்டுதல்செய்தல், கொடுத்துமாற்றுதல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கு;

(இ) நிதியத்தினால் உரித்தாக்கப்பட்ட, கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் நிலத்தின்மீது ஏதேனும் கட்டிடத்தை நிறுவுவதற்கு ;

(ஈ) சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணையங்களில் நிதியத்திற்குரித்தான பணங்களை முதலீடு செய்வதற்கு ;

(உ) நிதியத்தின் நோக்கத்துக்காக வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் மூடுவதற்கும் அத்துடன் பிணையுடன் அல்லது அத்தகைய பிணை இல்லாது நிதியத்தின் ஆதனம் கொண்டு பணத்தைக் கடனாகப் பெறுவதற்கு அல்லது திரட்டுவதற்கு ;

(ஊ) உள்நாட்டு மூலங்களில் இருந்தோ அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தோ நிதி திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக அளிப்புகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும்;

(எ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இடைநேர்விளைவான அல்லது உசிதமான அத்தகைய எல்லா வேறு செயல்களையும், விடயங்களையும் செய்வதற்கு.

**நிதியத்திற்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள்.**

7. பின்வருவன நிதியத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) உள்ளூரில் இருந்து அல்லது வெளிநாட்டில் இருந்து திரட்டப்பட்ட ஏதேனும் நிதி அல்லது பெறப்பட்ட அளிப்புகள் கொடைகள் அல்லது நன்கொடைகள் அல்லது தேறிய அல்லது சேர்க்கப்பட்ட பணங்கள்; அத்துடன்

(ஆ) முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் அல்லது நிதியத்திற்கு வருமதியான வேறு வரவுகள்.

**நிதியத்திலிருந்து செலுத்தப்படும் கொடுப்பனவுகள்.**

8. பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிதியத்தைத் தொழிற்படுத்தல், தாபித்தல், அல்லது பேணுதல் ஆகியவற்றில் உறப்படும் செலவுகள்; அத்துடன்

(ஆ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமானதென சபையினால் அங்கீகாரமளிக்கப்படுகின்றதான அல்லது நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதான அத்தகைய எல்லா வேறு கொடுப்பனவுகளும்.

**கணக்குகளும் கணக்காய்வும்.**

9. (1) நிதியத்தின் வருமானமும் செலவினமும், சொத்துகளும், பொறுப்புகளும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய உரிய கணக்குப் புத்தகங்களை சபை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) நிதியத்தின் கணக்குகள் கணக்காளர் தலைமையதிபதி அவர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) வருமானச் செலவினக் கணக்கு மற்றும் ஐந்தொகை சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றின் மூலம் ஒப்பமிட அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரு உறுப்பினர்களால் ஒப்பமிடப்படல் வேண்டும்.

(4) சபையின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

**விதிகளை ஆக்குவதற்கு சபைக்குள்ள தத்துவம்.**

10. சபையானது அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றுதலைப் பாதிக்கின்ற அல்லது அவற்றுடன் தொடர்புடையதான அல்லது அவற்றுக்கு இடைநேர்விளைவான ஏதேனும் கருமம் தொடர்பில் அது அவசியமானதெனக் கருதக்கூடிய அத்தகைய விதிகளை ஆக்கலாம்.

**இச்சட்டத்தின்கீழான செயலிலிருந்து சபை உறுப்பினர்களைப் பாதுகாத்தல்.**

11. (1) தொடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும், இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின்மீது சபையின் எவரேனும் உறுப்பினரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதான அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்பட்டதான ஏதேனும் செயலுக்காக அத்தகைய ஆளுக்கு எதிராகத் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் நிதியத்தினால் அல்லது நிதியத்திற்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சி அல்லது குற்ற வழக்கில் நிதியத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு நிதியத்தில் இருந்து

தொடர்ச்சி அல்லது குற்றவழக்கில் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட ஏதேனும் செலவு தொகைகள் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான எவரேனும் உறுப்பினருக்கெதிராக இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னராகக் கொணரப்படும் ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவானது அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் கொள்ளுமாயின் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய, நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

12. ஆளுக்கு எதிரான அல்லது ஆதனத்திற்கு எதிரான எழுத்தாணை எதுவும் நிதியத்திற்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு எதிராக வழங்கப்படுதல் ஆகாது. சபை உறுப்பினரொருவரான ஆளுக்கு அல்லது அவரின் ஆதனத்திற்கு எதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதல்.

13. நிதியமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடைத்தாதலும் வேண்டும். நிதியமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட்ட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல்.

14. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினலன்றி— பொருள்கோடல்.

"தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது—

(அ) இலங்கையின் வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்கென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்பவருமான தனியாளொருவர்; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கை வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகத் விருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவ

தற்கென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருள்படும்;

"கட்புல ஊனமுற்றோர்" என்பது பிறப்பினால் அல்லது வேறு விதமாக இரு கண்களும் முழுக் குருடாகவோ அல்லது ஏறத்தாழ முழுக் குருடாகவோ உள்ள ஆளொருவர் என்பதுடன், இரு கண்களும் இல்லாத ஓர் ஆளையும் ஒரு கண் குருடாகவோ அல்லது ஏறத்தாழ முழுக் குருடாகவோ உள்ள ஓர் ஆளையும் உள்ளடக்கும்.

ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

15. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,8௪௭ ஒவ்வோராண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.